முழுப் பதிப்புரிமையுடையது

# இலங்கை கணக்கீட்டுத் தொழில்நுட்பவியலாளர் கழகம்

## AA3 பரீட்சை – 2015 யூலை

## (AA34) செயன்முறைகள், கட்டுப்பாடுகள் மற்றும் கணக்காய்வு

(Processes, Controls and Audit)

01-08-2015
பிற்பகல்
[2.00 – 5.00]

பக்கங்கள் : 09
வினாக்கள் : 10

- **பரீட்சார்த்திகளுக்கான அறிவுறுத்தல்கள்** (கவனமாக வாசிக்கவும்)**:**

(1) ***நேரம் :*** *03 மணித்தியாலம்*

(2) ***வினாத்தாள் அமைப்பும் புள்ளிகள் ஒதுக்கீடும் :***

| பகுதி | தேவைப்பாடுகள் | புள்ளிகள் |
|---|---|---|
| **A** | எல்லா வினாக்களும் கட்டாயமானவை | 20 |
| **B** | எல்லா வினாக்களும் கட்டாயமானவை | 30 |
| **C** | மூன்று வினாக்களுள் இரண்டுக்கு மட்டும் விடையளிக்க வேண்டும். | 50 |
| **மொத்தப் புள்ளிகள்** | | **100** |

(3) ***விடைகள்*** *பரீடசை எழுத விண்ணப்பித்த மொழியில் வழங்கப்பட்ட விடைப் புத்தகத்தில் எழுதப்பட வேண்டும்.*

(4) *எல்லா செயன்முறைகளும் கணிப்புகளும் சமர்ப்பிக்கப்பட வேண்டும். எடுகோள்கள் ஏதும் இருப்பின் விளக்கமாகக் குறிப்பிடப்பட வேண்டும்.*

(5) *நிரற்படுத்த முடியாத கணிப்பான்கள் பயன்படுத்தப்படலாம்.*

(6) ***செயல் வினைச் சொல் நிரல்*** *இணைக்கப்பட்டுள்ளது. ஒவ்வொரு வினாவிலும் உள்ளடக்கப் பட்டுள்ள செயல் வினைச் சொல்லின் பொருள் வரையறையின் அடிப்படையில் அந்தந்த வினாக்களுக்கு விடையளிக்கப்படல் வேண்டும்.*

---

## <u>பகுதி A</u>

நான்கு (04) கட்டாய வினாக்கள்

(மொத்தம் 20 புள்ளிகள்)

### வினா 01

**(வரை) கலக்சி (தனி) கம்பனி, NN அசோசியேற்ஸ்** எனப்படும் பட்டயக் கணக்காளர் நிறுவனத்தினைச் சட்டநியதிக் கணக்காய்வாளராக நியமித்தது. கணக்காய்வாளர் நிதிக் கூற்றுக்களைக் கணக்காய்வு செய்வதற்கும் நிதிக் கூற்றுக்கள் உண்மையானதும் நீதியானதுமான தோற்றப்பாட்டினைத் தருகின்றதா எனும் அபிப்பிராயத்தைத் தெரிவிப்பதற்கும் பொறுப்புடையவர் ஆவார்.

(a) உறுதிப்பாட்டு ஈடுபாட்டில் (Assurance Engagement) சம்பந்தப்பட்ட மூன்று (03) பகுதியினரை இனங்காணவும். (03 புள்ளிகள்)

(b) ***(வரை) கலக்சி (தனி) கம்பனியின்*** கணக்காய்வாளர் என்ற ரீதியில் **NN அசோசியேற்ஸ்** கடைப்பிடிக்க வேண்டிய ஒழுக்கநெறிக் கோவையிலுள்ள அடிப்படைத் தத்துவங்கள் இரண்டினைக் (02) குறிப்பிடுக. (02 புள்ளிகள்)

(மொத்தம் 05 புள்ளிகள்)

## வினா 02

**காஞ்சனா** என்பவர் பரிப்பு வரையறுக்கப்பட்ட தனியார் கம்பனியொன்றின் மீள நிகழும் கணக்காய்வுக்கான முகாமையாளர் ஆவார். தமது கள வேலையைத் தொங்குமுன் நிரந்தர கணக்காய்வுக் கோப்பினை ஆய்வு செய்யும்போது முன்னைய கணக்காய்வு ஈடுபடுத்தற் கடிதம் நிரந்தரக் கோப்பில் இருந்ததனை அவதானித்தார்.

(a) மீள இடம்பெறும் கணக்காய்வு வாடிக்கையாளருக்கான ஈடுபடுத்தற் கடிதத்தில் உள்ளடக்க வேண்டிய மூன்று (03) விடயங்களை **இனங்காண்க**.

(03 புள்ளிகள்)

(b) நிரந்தரக் கணக்காய்வு கோப்பில் உள்ளடக்க வேண்டிய வேறு இரு (02) தகவல்களைக் **குறிப்பிடுக**. (02 புள்ளிகள்)

(மொத்தம் 05 புள்ளிகள்)

## வினா 03

கணக்காய்வு அபிப்பிராயத்திற்கு அடிப்படையாக விளங்கும் முடிவுகளை எட்டுவதற்கு கணக்காய்வாளர் பயன்படுத்தும் எல்லாத் தகவல்களும் கணக்காய்வுச் சான்றுகளாகும்.

(a) கணக்காய்வுச் சான்றுகளின் நம்பகத்தன்மையை அதிகரிக்கக்கூடிய இரு (02) காரணிகளைக் **குறிப்பிடுக**. (02 புள்ளிகள்)

(b) சாத்தியமான உறவுமுறைத் தரப்பினர் ஊடுசெயல்களை இனங்காண்பதற்கு கணக்காய்வாளர் மேற்கொள்ளக்கூடிய மூன்று (03) கணக்காய்வு விதிமுறைகளைக் **குறிப்பிடுக**. (03 புள்ளிகள்)

(மொத்தம் 05 புள்ளிகள்)

## வினா 04

நீங்கள் பட்டயக் கணக்காளர் நிறுவனமான **W அசோசியேற்ஸ்** இன் கணக்காய்வு முகாமையாளர் ஆவீர். **GT கோல்டிங்ஸ்** என்ற நிதிக் கம்பனியின் கணக்காய்வினை நடாத்துவதற்காக உங்களுக்கு ஒரு அணியினர் தரப்பட்டுள்ளனர். **GT கோல்டிங்ஸ்** கம்பனியின் கணக்காய்வுக் குழுவுக்குப் பொறுப்பான கணக்காய்வுப் பங்காளருடன் உமக்கு ஒரு கலந்துரையாடல் இடம்பெறவுள்ளது.

(a) **GT கோல்டிங்ஸ்** நிறுவனத்தின் துறைசார்ந்த, ஒழுங்குபடுத்தும் மற்றும் பிற வெளிவாரி காரணிகள் சம்பந்தமாக நீங்கள் அறிவினைப் பெற்றிட வேண்டிய பொதுவான விடயங்கள் மூன்றினைக் (03) **குறிப்பிடுக**. (03 புள்ளிகள்)

(b) கணக்காய்வுக் குழுவின் (Audit committee) தொழிற்பாடுகள் இரண்டினை (02) **இனங்காண்க.**

(02 புள்ளிகள்)

(மொத்தம் 05 புள்ளிகள்)

*பகுதி A முடிந்தது*

## பகுதி B

மூன்று (03) கட்டாய வினாக்கள்

(மொத்தம் 30 புள்ளிகள்)

### வினா 05

**(வரை) பாசன்ஸ் ரென்ட் (தனி) கம்பனி** ஒரு உற்பத்திக் கம்பனியாகும். கம்பனியின் தொழிற் சாலை ஊழியர்களின் எண்ணிக்கை 200 க்கும் அதிகமாகும். இவ்வூழியர்களுக்கு மாதச் சம்பளம், மேலதிக நேரக் கொடுப்பனவு மற்றும் வருகைப் படிகள் வழங்கப்படுகின்றன.

கம்பனியின் ஊழியர் புரள்வு (employee turnover) ஒப்பீட்டளவில் மிகவும் அதிகம். மனித வளப் பகுதியால் தயாரிக்கப்படும் கம்பனியின் சம்பளப் பட்டியல் நிதிக் கணக்காளரால் பரீட்சிக்கப்படு கின்றது. சம்பளப் பட்டியல் பொது முகாமையாளரால் அங்கீகரிக்கப்பட்டு ஒவ்வொரு ஊழியரின் நிகர சம்பளம் அவரவர் வங்கிக் கணக்குகளுக்கு அனுப்பப்படுகின்றன.

2015 ஏப்ரல் மாதத்திற்கான சம்பளக் கொடுப்பனவின் பின் புதிதாகச் சேர்ந்த நான்கு ஊழியர்கள் தங்களது சம்பளம் அவர்களின் வங்கிக் கணக்கிற்கு அனுப்பப்படவில்லை என முறைப்பாடு செய்தனர். வேறு 10 ஊழியர்கள் தங்கள் மேலதிக நேரக் கொடுப்பனவு குறைத்து செலுத்தப்பட்டு ள்ளது எனவும் முறையிட்டுள்ளனர்.

சம்பளம் அதிகமாகச் செலுத்தப்பட்டுள்ளதா என முகாமை இப்போது அக்கறை கொண்டுள்ளது.

***நீர் செய்ய வேண்டியது,***

(a) உரிமம் ஒன்றில் மோசடி அல்லது வழு இடர்களில் அதிகரிப்பை ஏற்படுத்தக்கூடிய மூன்று புறநிலைகள் அல்லது நிகழ்வுகளைக் **குறிப்பிடுக**.

(03 புள்ளிகள்)

(b) மோசடி அல்லது வழு என்பவற்றைப் பொறுத்தமட்டில் கணக்காய்வாளரின் பொறுப்பினை **விளக்குக.** (03 புள்ளிகள்)

(c) ஊழியர்களுக்கு குறைவாக அல்லது அதிகமாக சம்பளம் வழங்கும் இடரை குறைப்பதற்காக **பசன் ரெண்ட் (தனி) கம்பனி** நடைமுறைப்படுத்துவதற்கு கருதக்கூடிய நான்கு (04) கட்டுப் பாடுகளை **இனங்காண்க.** (04 புள்ளிகள்)

(மொத்தம் 10 புள்ளிகள்)

### வினா 06

கையடக்கத் தொலைபேசி, கையடக்கக் கணினி மற்றும் தொடர்புபட்ட உதிரிப்பாகங்களை விற்பனை செய்யும் **(வரை) டயல் ஸ்பீட் (தனி) கம்பனியின்** கணக்காய்வு முகாமையாளராக **நளின்** உள்ளார். நாட்டின் முக்கிய நகரங்களில் விற்பனை நிலையங்களை கம்பனி கொண்டு ள்ளது. திட்டமிடல் உரையாடலின்போது **நளின்** தனது அணியினர் கம்பனியின் கணக்காய்வு மேற்கொள்ளும்போது சந்தேக மனநிலையுடன் (skeptical mind) இருக்க வேண்டும் என அறிவுறுத்தி யுள்ளார்.

கம்பனி புதிய வகை கையடக்கத் தொலைபேசியை அறிமுகப்படுத்தியுள்ளதால் பழைய வகை கையடக்கத் தொலைபேசிகள் விற்பனை செய்யப்படாமல் இருக்கக்கூடிய இடர் காணப்படலாமென **நளின்** கூறியுள்ளார்.

***நீங்கள் செய்ய வேண்டியது பின்வருமாறு :***

(a) தொழில்சார் சுய தீர்மானத்திலிருந்து (Professional judgement) தொழில்சார் சந்தேகத்தை (Professional skepticism) பேதப்படுத்தி **விளக்குக.** (05 புள்ளிகள்)

(b) ***(வரை) டயல் ஸ்பீட் (தனி) கம்பனியின்*** தொக்குகளின் மதிப்பீட்டு உறுதிப்பாடு தொடர்பாக கணக்காய்வாளர் செயற்படுத்த வேண்டிய கணக்காய்வு விதிமுறைகளை **விளக்குக**. (05 புள்ளிகள்)

(மொத்தம் 10 புள்ளிகள்)

## வினா 07

(a) (வரை) சிலோன் நெற்வேர்க் (மட்) கம்பனியானது 2007 ஆம் வருட 07 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின்கீழ் பதிவு செய்யப்பட்டு கூட்டிணைக்கப்பட்ட கம்பனியாகும். பணிப்பாளர் சபை கம்பனியின் முதலாவது கணக்காய்வாளரை நியமனம் செய்ய உத்தேசித்துள்ளது.

***நீர் செய்ய வேண்டியது,***

(i) ஒரு கம்பனியின் கணக்காய்வாளராக நியமிக்கப்பட தகுதியற்ற இரு (02) நபர்களைக் **குறிப்பிடுக**. (02 புள்ளிகள்)

(ii) கம்பனியின் முதற் கணக்காய்வாளரை நியமிக்க மேற்கொள்ளும் செயன்முறையை **விளக்குக.** (03 புள்ளிகள்)

(b) 2015 மார்ச் 31 இல் முடிவடைந்த வருடத்திற்கான **எனேர்ஜி பிவரேஜஸ் PLC கம்பனியின்** நிதிக் கூற்றுக்கள் மீதான கணக்காய்வு அறிக்கையின் பிரித்தெடுப்பு கீழே தரப்பட்டுள்ளது.

*கணக்காய்வு அறிக்கைப் பிரித்தெடுப்பு :*

> ***அபிப்பிராயத்தின் அடிப்படை***
>
> 2014 யூன் 30 இல் கம்பனியின் கணக்காய்வாளராக நாம் நியமிக்கப்பட்டோம். அவ்வாறான நிலையில் வருட ஆரம்பத்தில் இடம்பெற்ற பௌதிக தொக்குக் கணக்கெடுப்பை நாம் அவதானிக்கவில்லை. 2014 மார்ச் 31 இல் இருந்த தொக்குக் கணியங்களை மாற்று வழிகள் மூலம் நாம் திருப்திப்படுத்திக் கொள்ள முடியாமல் உள்ளோம். ஆரம்பத் தொக்குகள் நிதிச் செயற்பாடு மற்றும் காசுப் பாய்வுகளை தீர்மானிப்பதில் கணக்கிற் கொள்ளப்படுவதால் வருமானக் கூற்றில் அறிக்கையிடப் பட்ட வருடத்திற்கான இலாபம் மற்றும் காசுப் பாய்வுக் கூற்றில் குறிப்பிடப்பட்ட தொழிற்பாட்டு நடவடிக்கைகளிலிருந்தான நிகர காசுப்பாய்வு ஆகியவற்றுக்கு செவ்வையாக்கம் தேவைப்படுமா எனத் தீர்மானிக்க முடியாமல் உள்ளது.
>
> ***அபிப்பிராயம்***
>
> எமது அபிப்பிராயப்படி, அபிப்பிராயத்திற்கான அடிப்படைப் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயத்திற்கான சாத்தியமான தாக்கங்கள் தவிர, நிதிக் கூற்றுக்கள் சகல பொருண்மையான விடயங்கள் தொடர்பாகவும் எனர்ஜி பிவெரெஜஸ் PLC யின் 2015 மார்ச் 31 ஆந் திகதியில் நிதி நிலைமை மற்றும் அந்தத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான கம்பனியின் நிதிச் சாதனை மற்றும் காசுப் பாய்வுகளை இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு அமைவாக நேர்மையாக முன்னிலைப்படுத்துகின்றது.

**நீங்கள் செய்ய வேண்டியது,**

2015 மார்ச் 31 இல் முடிவடைந்த வருடத்திற்கான **எனேர்ஜி பிவரேஜஸ் கம்பனிக்கு** வழங்கப்பட்ட திருத்தியமைத்த கணக்காய்வு அபிப்பிராயத்தின் வகையை இனங்காண்பதுடன் அவ்வாறான அபிப்பிராயத்தை வழங்குவதற்கான காரணத்தையும் **விளக்குக.** (05 புள்ளிகள்)

(மொத்தம் 10 புள்ளிகள்)

*பகுதி B முடிந்தது*

## பகுதி C

ஏதாவது இரு (02) வினாக்களுக்கு மட்டும் விடையளிக்கவும்.

(மொத்தம் 50 புள்ளிகள்)

### வினா 08

(a) அகக் கட்டுப்பாட்டு சட்டகத்தின் ஐந்து (05) ஆக்கக்கூறுகளைக் **குறிப்பிடுக**. (05 புள்ளிகள்)

(b) ஒரு பொருட்கள் கொள்வனவுச் செயன்முறையில் (procurement process) உள்ள மூன்று (03) இடர்களை இனங்கண்டு அவைகள் ஒவ்வொன்றினதும் தாக்கத்தைக் குறைத்துக் கொள்ளக் கூடிய ஒரு கட்டுப்பாட்டினை **குறிப்பிடுக.** (06 புள்ளிகள்)

(c) **SH இன்ரநெஷனல் (தனி) கம்பனி** நுகர்வுப் பொருட்களை உற்பத்தி செய்யும் கம்பனியாகும். நாடு பூராகவும் முகவர்கள் மூலமான விநியோக வலையமைப்பினை இக்கம்பனி கொண்டிருக்கின்றது.

முகவர்கள், கம்பனியின் கணக்கு நிறைவேற்று அதிகாரியான **சிரோமா** என்பவருடன் தொடர்பு கொண்டு பொருட்களுக்கான கட்டளையைச் சமர்ப்பிப்பார்கள். அவர் ஒரு குறிப்புப் புத்தகத்தில் இந்தக் கட்டளைகளைப் பதிவு செய்து விற்பனைச் சிட்டையைத் (invoice) தயாரித்து களஞ்சிய முகாமையாளருக்கு அனுப்புவார். விற்பனைச் சிட்டையின் அடிப்படை யில் உரிய இடங்களுக்கு பொருட்கள் அனுப்பப்படும்.

திருப்பி அனுப்பப்படும் பொருட்களின் விபரம் களஞ்சிய முகாமையாளரால் திருப்பற் குறிப்பில் (Return note) பதிவு செய்யப்படும். **சிரோமா** இப்பொருட்களின் திருப்பம் தொடர்பாக செலவுப் பதிவுக் குறிப்பினைத் தயாரித்து வருமதியாளர்கள் பேரேட்டுக் கணக்கில் பதிவு செய்வார்.

விற்பனை முகாமையாளரான **திருமதி. வாகிட்** மூலப்பொருட்கள் கொள்வனவு செய்ய நிதி போதுமானதாக இல்லாதபொழுது தொலைபேசி மூலம் முகவர்களை அழைத்து கொடுப்பனவை கோருவார். **சிரோமா** முகவர்களிடமிருந்து பெறும் தொகைகளைப் பதிவு செய்வதுடன் வருமதியாளரின் பதிவேட்டினை பேணுவார். 2015 மார்ச் 31 இல் முடிவடைந்த நிதி வருடத்தில் ரூ. 12.5 மில்லியன் அறவிடமுடியாத கடனாகப் பதிவழிப்புச் செய்யப்பட்டது. ஒவ்வொரு மாத முடிவிலும் **சிரோமா** களஞ்சியத்தில் தொக்கு மாதிரிகளின் பௌதிகக் கணக்கெடுப்பினை அவதானிப்பார்.

**நீர் செய்ய வேண்டியது,**

(i) மேலே விபரிக்கப்பட்ட அகக் கட்டுப்பாட்டு முறைமையின் அகக் கட்டுப்பாட்டுப் பலவீனங்கள் நான்கினை (04) **இனங்காண்க**. (04 புள்ளிகள்)

(ii) குறிப்பிட்ட இந்த ஒவ்வொரு பலவீனத்தையும் எவ்வாறு சமாளிப்பது என **விளக்குக.** (06 புள்ளிகள்)

(iii) **SH இன்ரநெஷனல் கம்பனியின்** முகாமையாளர் நடைமுறைப்படுத்த வேண்டிய விற்பனைச் செயற்பாட்டின் மீதான கட்டுப்பாடுகள் இரண்டினை (02) இனங்கண்டு, அவை தடுத்தல் (preventive) கட்டுப்பாடா அல்லது கண்டுபிடித்தற் (detective) கட்டுப்பாடா எனக் **குறிப்பிடுக.** (04 புள்ளிகள்)

(மொத்தம் 25 புள்ளிகள்)

## வினா 09

(a) தரக் கட்டுப்பாட்டு முறைமையின் மூலக்கூறுகள் (elements) மூன்றினை (03) **விபரிக்குக.** (06 புள்ளிகள்)

(b) ஒரு கணினி திட்ட நிரலில் அனுமதிக்கப்படாத மாற்றங்களைத் தடுத்தல் அல்லது கண்டு பிடித்தல் தகவற் தொழில்நுட்பத்தின் பொதுக் கட்டுப்பாடாகும்.

(i) ஒரு உரிமத்தில் பலமான தகவற் தெரில்நுட்பக் கட்டுப்பாடுகளை நடைமுறைப்படுத்தும் நோக்கத்தை **விளக்குக.** (04 புள்ளிகள்)

(ii) ஒரு உரிமத்தில் கணினிநிரற் திட்டத்தில் அனுமதிக்கப்படாத மாற்றங்களைத் தடுப்பதற்கு அல்லது கண்டுபிடிப்பதற்கு ஒரு நிறுவனம் கருத்திற் கொள்ளக்கூடிய நான்கு (04) கட்டுப்பாடுகளுக்கு உதாரணங்களை **இனங்காண்க.** (04 புள்ளிகள்)

(c) அலுவலக, வீட்டுப்பாவனைக்கான தளபாடங்களை உற்பத்தி செய்யும் கம்பனியான **(வரை) டிசயின் பார்னிச்சர் (தனி) கம்பனியின்** நிதிக் கணக்காய்வுக்கான சிரேஷ்ட கணக்காய்வு அலுவலர் **சுனில்** ஆவார். கம்பனி நிட்டம்புவ மற்றும் ஹொரணை ஆகிய இடங்களில் உற்பத்தி பொறித் தொகுதிளைக் கொண்டுள்ளது. தலைமை அலுவலகம் கொழும்பில் அமைந்துள்ளது. நாட்டின் பல பகுதிகளில் உள்ள கம்பனியின் காட்சியறைகள் மூலம் விற்பனைகள் செய்யப்படும். ஒவ்வொரு காட்சியறையும் வாடிக்கையாளர்களிடமிருந்து கட்டளைகளைப் பெற்று அவற்றை தகவல் தொழில்நுட்ப முறைமையில் பதிவு செய்யும். காட்சியறை அலுவலர்கள் கணிப்பு முறையுடன் தொடர்புபடுத்தப்பட்ட தகவல் தொழில்நுட்ப முறைமையின் தொக்கிருப்பு மற்றும் விற்பனைச் சிட்டை தயாரிக்கும் பகுதிகளுடன் தொடர்புகொள்ள முடியும். நிதிப் பிரிவு, பொருட் கொள்வனவுப் பிரிவு மற்றும் தகவல் தொழில்நுட்பப் பிரிவுகள் தலைமை அலுவலக்ததில் அமைந்துள்ளன.

2014 மார்ச் 31 மற்றும் 2015 மார்ச் 31 இல் முடிவடைந்த கம்பனியின் வரைபு நிதிக் கூற்றுக்கள் உரிய குறிப்புகளுடன் கீழே தரப்பட்டுள்ளன.

**முற்றடக்க வருமானக் கூற்று** ***(ரூ.'000)***

| முடிந்த வருடம் | 31 மார்ச் 2015 | 31 மார்ச் 2014 |
|---|---|---|
| விற்பனை | 1,200 | 900 |
| விற்பனைக் கிரயம் | (865) | (620) |
| **மொத்த இலாபம்** | 335 | 280 |
| விற்பனை விநியோகச் செலவுகள் | (85) | (54) |
| நிர்வாகச் செலவுகள் | (43) | (34) |
| **தொழிற்பாட்டு இலாபம்** | 207 | 192 |
| நிதிச் செலவுகள் | (20) | (16) |
| **வரிக்கு முன்னரான இலாபம்** | 187 | 176 |
| வரிச் செலவுகள் | (75) | (58) |
| **வருடத்திற்கான இலாபம்** | **112** | **118** |
| ஏனைய முற்றடக்க வருமானம் | - | - |
| **வருடத்திற்கான மொத்தமுற்றடக்க வருமானம்** | **112** | **118** |

**நிதி நிலைக் கூற்று** *(ரூ.'000)*

| | 31 மார்ச் 2015 | 31 மார்ச் 2014 |
|---|---|---|
| **நடைமுறைசாரா சொத்துக்கள் :** | | |
| ஆதனம், பொறி, உபகரணம் | 890 | 695 |
| **நடைமுறைச் சொத்துக்கள் :** | | |
| தொக்குகள் | 98 | 75 |
| வியாபார மற்றும் ஏனைய வருமதிகள் | 30 | 22 |
| காசும் காசுக்கு சமமானவையும் | 85 | 50 |
| | 213 | 147 |
| | **1,103** | **842** |
| **உரிமையாண்மையும் பரிப்புக்களும் :** | | |
| குறிப்பிட்ட மூலதனம் | 390 | 350 |
| கைக்கொள் இலாபம் | 320 | 202 |
| | 710 | 552 |
| **நடைமுறை சாராத பரிப்புக்கள் :** | | |
| கடன்படுகைகள் | 150 | 115 |
| வரையறுக்கப்பட்ட பயன் கடப்பாடுகள் | 20 | 15 |
| | 170 | 130 |
| **நடைமுறைப் பரிப்புக்கள் :** | | |
| வியாபார, ஏனைய சென்மதிகள் | 134 | 100 |
| கடன்படுகைகள் | 89 | 60 |
| | 223 | 160 |
| | **1,103** | **842** |

**2015 மார்ச் 31 இல் முடிந்த வருடக் கணக்கிற்கான குறிப்புகள் :**

(1) கம்பனி, இந்த வருடத்தில் சில பழைய இயந்திரங்களை பதிவழிப்புச் செய்து புதிய இயந்திரங்களைக் கொள்முதல் செய்தது.

(2) இந்த வருடத்தில் கம்பனி ஹொரணையில் ஒரு களஞ்சியசாலையை மூன்றாம் பகுதியின ருக்கு வாடகைக்கு விட்டதுடன் நிட்டம்புவவில் மேலதிக களஞ்சியசாலை ஒன்றை நிர்மாணித்தது.

**டிசயின் பார்னிச்சர் (தனி) கம்பனியின்** கணக்காய்வு இடர்களை மதிப்பிடும் பணி **சுனிலுக்கு** வழங்கப்பட்டுள்ளது.

**நீங்கள் செய்ய வேண்டியது :**

(i) பொருண்மையான பிறள் கூற்று இடர்களை அடையாளம் கண்டு, மதிப்பிடுவதற்கு **(வரை) டிசயின் பார்னிச்சர் (தனி) கம்பனிக்கு சுனில்** மேற்கொள்ளக்கூடிய ஐந்து (05) இடர் மதிப்பீட்டு விதிமுறைகளைக் **குறிப்பிடுக**. (05 புள்ளிகள்)

(ii) மேற்படி தகவல்களின் அடிப்படையில் **(வரை) டிசயின் பார்னிச்சர் (தனி) கம்பனியின்** கணக்காய்வினை மேற்கொள்ளும்போது **சுனில்** கவனஞ் செலுத்த வேண்டிய மூன்று (03) பகுதிகளை (areas) **விளக்குக**. (06 புள்ளிகள்)

(மொத்தம் 25 புள்ளிகள்)

## வினா 10

(a) இலங்கை கணக்காய்வு நியமம் 570 – தொடர்ந்து இயங்கும் தன்மை என்ற நியமத்தின் பிரகாரம் நிதிக் கூற்றுக்களைத் தயாரித்து முன்வைத்தலில் முகாமை தொடர்ந்து இயங்கும் என்ற ஊகத்தின் பொருத்தத்தன்மையை தீர்மானிக்கப் போதுமான பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெறுவது கணக்காய்வாளரின் பொறுப்பாகும்.

நிதிக் கூற்றுக்களைத் தயாரித்து முன்வைத்தலில் தொடர்ந்து இயங்கும் தன்மையின் ஊகத்தை சந்தேகத்திற்குள்ளாகக்கூடிய ஐந்து (05) நிதிசார் நிகழ்வுகள் அல்லது புறநிலை களை **குறிப்பிடுக**. (05 புள்ளிகள்)

(b) ***வரை பிளெக்ஸ் பிளாஸ்ரிக் (தனி) கம்பனி*** பிளாஸ்ரிக் பொருட்களை உற்பத்தி செய்கின்றது. கம்பனி உற்பத்திச் செயற்பாட்டிற்கு இறக்குமதி செய்த மூலப்பொருட்களை பயன்படுத்துகின்றது.

2015 மார்ச் 31 மற்றும் 2014 மார்ச் 31 இலான தொக்கு இருப்பு சராம்சம் பின்வருமாறு:

| | **2015 மார்ச் 31 (ரூ'000)** | **2014 மார்ச் 31 (ரூ'000)** |
|---|---|---|
| மூலப்பொருட்கள் | 125,000 | 90,000 |
| புத்துருவாகும் பொருட்கள் | 75,000 | 45,000 |
| முடிவுற்ற பொருட்கள் | 365,000 | 245,000 |
| **மொத்தம்** | **565,000** | **380,000** |

2015 மார்ச் 31 மற்றும் 2014 மார்ச் 31 இல் முடிந்த வருடங்களுக்கான விற்பனை மற்றும் விற்பனைக் கிரயங்கள் பின்வருமாறு :

| | **2015 மார்ச் 31 (ரூ'000)** | **2014 மார்ச் 31 (ரூ'000)** |
|---|---|---|
| விற்பனை | 2,000,000 | 1,400,000 |
| விற்பனைக் கிரயம் | (1,720,000) | (1,176,000) |
| **மொத்த இலாபம்** | **280,000** | **224,000** |

***மூலப் பொருட்கள்***

உற்பத்திக்கு நான்கு முக்கிய மூலப் பொருட்கள் பயன்படுத்தப்படுகின்றன. இந்த நான்கு வகைகளும் நிறம், உருவம் அடிப்படையில் மேலும் வகைப்படுத்தப் பட்டு மொத்தம் 200 மூலப்பொருள் உருப்படிகள் உள்ளன. இந்த மூலப் பொருட்களில் அலகு விலை ஒரே பெறுமதியைக் கொண்டது. அதன் பெறுமதி நிறையேற்று சராசரி கிரயத்தில் தகவல் தொழில்நுட்ப முறை மூலம் கணக்கீடு செய்யப்படுகின்றது. எனினும் களஞ்சிய முகாமை யாளரும் நிதி முகாமையாளரும் தொக்கு முறை மீது நிர்வாக அதிகாரம் கொண்டிருப்பதால் அவர்கள் முறைமையிலுள்ள விலைகளில் மாற்றம் செய்ய முடியும்.

இந்த ஈடுபடுத்தலில் நீங்கள் கணக்காய்வு சிரேஸ்ட அலுவலர் ஆவீர்.

**நீங்கள் செய்ய வேண்டியது :**

(i) கணக்காய்வு விதிமுறையில் ஒன்றான 'அவதானித்தல்'(observation) பற்றி விளக்கத்தை வழங்கி அதன் வரையறைகளை **குறிப்பிடுக**. (04 புள்ளிகள்)

(ii) 2015 மார்ச் 31 இல் தொக்கிருப்பு மீதான கணக்காய்வுச் சான்றுகளைப் பெறுவதற்கு நீங்கள் மேற்கொள்ளக்கூடிய பகுப்பாய்வு விதிமுறைகள் இரண்டினை (02) இனங்காண்க. (02 புள்ளிகள்)

(iii) 2015 மார்ச் 31 இல் மூலப்பொருளின் மதிப்பீட்டுச் செம்மையை பரீட்சிக்க நீங்கள் செயற்படுத்தக்கூடிய இரு (02) கணக்காய்வு விதிமுறைகளைக் குறிப்பிடுக. (04 புள்ளிகள்)

(c) உங்கள் கனிஷ்ட அலுவலரால் வியாபார வருமதிகள் தொடர்பாக தயாரிக்கப்பட்டு உங்கள் மீளாய்வுக்கு பின்வரும் 'வேலைத்தாள்' (working paper) வழங்கப்பட்டுள்ளது :

WP

*தயாரிக்கப்பட்டது: Sf* *திகதி :*
*மீளாய்வு செய்யப்பட்டது :* *திகதி :*
*வாடிக்கையாளர் :*

***வருமதியாளர்களிடமிருந்து உறுதிப்படுத்தல்களைப் (Confirmation) பெறுதல்***

*நாங்கள் வருமதியாளர் நிரலிலுள்ள 110 வருமதியாளர்களில் பின்வரும் 06 வருமதியாளர்களை தெரிந்து உறுதிப்படுத்தல் கோரிக்கையை எங்கள் கட்டுப்பாட்டின் கீழ் அனுப்பினோம் :*

| வருமதியாளர் | 2015 மார்ச் 31இல் மீதி (ரூ.) | பெற்ற பதில் | உறுதிப்படுத்திய மீதி (ரூ.) | வேறுபாடு (ரூ.) |
|---|---|---|---|---|
| பெயார் ரேடிங் | 150,000 | இல்லை | எளாது | எளாது |
| அல்பா ரேடிங் | 2,678,000 | இல்லை | எளாது | எளாது |
| மாத்தற ஸ்ரோர் | 55,000 | ஆம் | 55,000 | 0 |
| சம்மேரா கம்பனி | 5,000 | இல்லை | எளாது | எளாது |
| குயிக் ரேடர்ஸ் | 86,000 | ஆம் | 54,500 | 31,500 |
| N & N (தனி) கம்பனி | 575,000 | இல்லை | எளாது | எளாது |

(i) மேற்குறிப்பிட்ட வருமதியாளர்கள் உறுதிப்படுத்தல் செயன்முறையில் உங்கள் கனிஷ்ட அலுவலரால் செயற்படுத்திய கணக்காய்வு விதிமுறைகளில் போதுமான தன்மை தொடர்பில் மூன்று (03) குறைபாடுகளை விளக்குக. (06 புள்ளிகள்)

(ii) மேற்குறிப்பிட்ட வேலைத்தாளில் காணப்பட்ட நான்கு (04) குறைபாடுகளை குறிப்பிடுக. (04 புள்ளிகள்)

(மொத்தம் 25 புள்ளிகள்)

*பகுதி C முடிந்தது*

# செயல் வினைச்சொல் பட்டியல்

| அறிவு மட்டம் | வினைச்சொல் பட்டியல் | வரைவிலக்கணம் (பொருள் வரையறை) |
|---|---|---|
| **மட்டம் 01**<br>**கிரகித்தல்**<br><br>முக்கிய தகவலை ஞாபகப்படுத்தி விபரித்தல் | **பொருள் வரைறை செய்க / வரைவிலக்கணம் செய்க (Define)** | தன்மை, வியாபகம் அல்லது பொருள் பற்றி விபரித்தல் |
| | **வரைக (Draw)** | வரிப்படம் அல்லது வரைபடம் வடிவில் வரைந்து காட்டுதல் |
| | **அடையாளங் காண்க / இனங்காண்க (Identify)** | கருத்திற்கொண்ட பின்னர் தெரிந்து கொள்ளல் அல்லது தெரிவு செய்தல் |
| | **நிரற்படுத்துக / பட்டியலிடுக (List)** | தொடர்புபட்ட உருப்படிகளை ஒன்றின் கீழ் ஒன்றாக எழுதுதுல் |
| | **தொடர்புபடுத்துக (Relate)** | தர்க்க ரீதியாக அல்லது காரண ரீதியாக தொடர்புகளை நிலைநாட்டல் |
| | **கூறுக (State)** | திட்டவட்டமாக அல்லது தெளிவாக தெரிவித்தல் |
| | **கணிக்குக / கணிப்பிடுக (Calculate / Compute)** | கணித ரீதியாக கணிப்பீட்டினை மேற்கொள்ளல் |
| | **ஆராய்க (Discuss)** | முடிவொன்றினை அடையும் நோக்கில் வேறுபட்ட விடயங்களை விவாதத்தின் மூலம் விபரமாக ஆய்வு செய்தல் |
| | **விபரிக்குக (Explain)** | உரிய உண்மைகளை வெளிக்காட்டி, தெளிவான விவரணத்தை விபரமாகத் தெரிவித்தல் |
| | **பொருள் விளக்குக / கருத்துக் கூறுக (Interpret)** | விளங்கிக் கொள்ளக்கூடிய வகையில் தெளிவுபடுத்தல் |
| | **ஏற்பிசைவு செய்தல் (Recognize)** | அறிவை அல்லது அவை சார்ந்த அனுபவத்தினைக் கொண்டு, செல்லுபடித் தன்மையை அல்லது அதன் இல்லாமையைக் காட்டுதல் |
| | **பதிவு செய்க (Record)** | உரிய பதிவுகளை விரிவாகப் பதிவு செய்தல் |
| | **தொகுக்குக / சுருக்கத்தைத் தருக (Summarize)** | பிரதான விடயங்களில் (உண்மைகள் அல்லது பெறுமதிகள்) சுருக்கமான கூற்றினைத் தருதல் |

| அறிவு மட்டம் | வினைச்சொல் பட்டியல் | வினைச்சொல் வரைவிலக்கணம் |
|---|---|---|
| **மட்டம் 02**<br>**பியோகித்தல்**<br><br>கற்றதைக் கொண்டு வேறு ஒன்றினை அறிவதற்கு அறிவைப் பயன்படுத்துதல் / வினாக்களைத் தீர்த்தல் | **பிரயோகிக்குக (Apply)** | நடைமுறைப் பயன்பாட்டிற்குக் கொண்டு வருதல் |
| | **மதிப்பிடுக (Assess)** | பெறுமதி, தன்மை, இயலுமை அல்லது தரத்தினைத் தீர்மானித்தல் |
| | **எடுத்துக் காட்டுடன் விபரிக்குக (Demonstrate)** | விசேடமாக உதாரணங்களுடன் நிறுவுதல் |
| | **வரைபடத் தாளில் வரைக (Graph)** | வரைபடம் ஒன்றின் மூலம் காட்டுதல் |
| | **தயாரிக்குக (Prepare)** | கேட்கப்பட்ட விடயத்தினை உரிய முறையில் வெளிக்காட்டல் |
| | **முன்னுரிமைப்படுத்துக (Prioritize)** | முக்கியத்துவத்தின் அடிப்படையில் ஒழுங்கு படுத்துதல் அல்லது வரிசைப்படுத்துதல் |
| | **கணக்கிணக்கம் செய்க / இணக்கம் செய்க (Reconcile)** | வேறொன்னுடன் இணங்குதலை ஒப்புவித்தல் |
| | **தீர்க்குக (Solve)** | கணிப்பீடு அல்லது விளக்கங்களின் மூலம் தீர்வு காணல் |

| அறிவு மட்டம் | வினைச்சொல் பட்டியல் | வினைச்சொல் வரைவிலக்கணம் |
|---|---|---|
| **மட்டம் 03**<br>**பகுப்பாய்வு**<br><br>எண்ணங்களுக்கு இடையில் தொடர்புகளை ஏற்படுத்தி ஒப்பிடுதலும் வேறுபடுத்தலும் / திறந்த வினாக்களைத் தீர்த்தல் | **பகுப்பாய்வு செய்க (Analyze)** | தீர்வினை அல்லது வெளிப்பாட்டினைத் தெரிந்து கொள்ளும் நோக்கில் விபரமாக ஆய்வு செய்தல் |
| | **ஒப்பிடுக (Compare)** | ஒற்றுமைகளை அறிந்து கொள்ளும் நோக்கில் பரீட்சித்தல் / ஆய்வு செய்தல் |
| | **வேறுபடுத்துக (Contrast)** | வேற்றுமைகளை அறிந்து கொள்ளும் நோக்கில் பரீட்சித்தல் / ஆய்வு செய்தல் |
| | **பேதப்படுத்துக/வித்தியாசப்படுத்துக /வகையிடுக (Differentiate)** | சிலவற்றை வேறுபடுத்தும் வித்தியாசங்களைக் காட்டுதல் / வகைப்படுத்தல் |
| | **சுருக்கமாகக் காட்டுக / குறிப்பிடுக (Outline)** | முக்கிய குணாம்சங்களின்/சிறப்பியல்புகளின் தொகுப்பினைத் தருதல் |